

அமரர்

# திருமதி. வள்ளிநாயகம் இராஜரெட்ணம்

அவர்களின்

# நினைவு மலர்

15.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
19.06.1923

மறைவு
13.02.2011

எத்தகைய தவறையும் மன்னிக்கும்
நீதிமன்றம் உண்டு என்றால்
அது தாயின் இதயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள்

(பத்து நாள் உற்சவங்களில் பாடுவதற்காக)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் - 1

## தேவாரம் - சம்பந்தர்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடி பரவ
மங்குல் மதி தவழ் மாட வீதி
மருகல் நிலாவியமைந்த சொல்லாய்
செங் கயல் ஆர் புனல் செல்வம் மல்கு
சீர்கொள் செங்காட்டம் குடி அதனுள்
காங்குல் விளங்கெரி ஏந்தி ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

## திருவாசகம் - மாணிக்கவாசகர்

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா – திருமாளிகைத்தேவர்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்(கு) அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

உலகெலாம் உணர்ந்(து) ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்(து) ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் - 2

## தேவாரம் - சம்பந்தர்

சடையாய்! எனுமால் சரண் நீ! எனுமால்
விடையாய்! எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே.

## திருவாசகம் - மாணிக்கவாசகர்

வேண்டத் தக்க(து) அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்(கு) அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா(து) அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்(று) உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

## திருவிசைப்பா - சேந்தனார்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரை இலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய் அடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்(கு) ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அள(வு)
இல்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம் – சேக்கிழார்

ஞானத்தின் திரு உருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றை செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் – 3

## தேவாரம் – சம்பந்தர்

மங்கயற்கரசி வளவர்கோன் பாவை
வரி வளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டி மா தேவி
பணி செய்து நாள் தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூத நாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே

## திருவாசகம் – மாணிக்கவாசகர்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்(து) உன்
விரையார் கழற்(கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்(து) உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா – திருமாளிகைத்தேவர்

இடர் கெடுத்(து) என்னை ஆண்டு கொண்(டு) என் உள்
இருள் பிழம்(பு) அற எறிந்(து) எழுந்த
சுடர் மணி விளக்கின் உள் ஒளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதீ!
அடல் விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மால் அறியாமைப்
படர் ஒளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

சொல் ஆண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில் ஆண்டிற் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராமே
வில் ஆண்ட கனகத் திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல் ஆண்(டு) என்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமை இலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் – 4

## தேவாரம் – நாவுக்கரசர்

மனம் எனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றிச்
சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது
மனன் எனும் பாறை தாக்கி மறியும் போ(து) அறிய ஒண்ணா(து)
உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே!

## திருவாசகம் – மாணிக்கவாசகர்

நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச் சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்(கு) என்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே.

## திருவிசைப்பா – திருமாளிகைத்தேவர்

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா!
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா!
அம்பொன் செய் அம்பலத்தரசே!
ஏறணி கொடி எம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா(று) இசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

சீரும் திருவும் பொலிய
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமை மணவாளனுக்(கு) ஆம்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் - 5

## தேவாரம் - நாவுக்கரசர்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

## திருவாசகம் - மாணிக்கவாசகர்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப் பட்(டு)
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

## திருவிசைப்பா - திருமாளிகைத்தேவர்

அருள் திரள் செம்பொன் சோதி
அம்பலத்தாடுகின்ற
இருள் திரள் கண்டத்தெம்மான்
இன்பருக்(கு) அன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்களாய்
பிரட்டரைக் காணா கண் வாய்
பேசா(து) அப்பேய்களோடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம் – சேக்கிழார்

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் - 6

## தேவாரம் - நாவுக்கரசர்

கருவாய்க் கிடந்(து) உன் கழலே நினையும கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்(து) உந்தன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே.

## திருவாசகம் - மாணிக்கவாசகர்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசன் அவன் எவ் உயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருவிசைப்பா - சேந்தனார்

மண்டலத்(து) ஒளியை விலக்கி யான் நுகர்ந்த
மருந்தை என் மாறிலா மணியைப்
பண்டலர் அயன் மாற்(கு) அரிதுமாய் அடியார்க்(கு)
எளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரி வார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூர் ஆளும்
கொண்டலம் கண்டத்(து) எம் குரு மணியைக்
குருக வல் வினை குறு காவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண் அளவும் சென்று
விம்மி மிகு திரு ஆரூரின்
மழவிடை ஆற்கு வழி வழி
ஆளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடியாரொடும் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைமலர் உச்சி மேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் – 7

## தேவாரம் – நாவுக்கரசர்

தூண்டு சுடர் அனைய சோதி கண்டாய்
தொல் அமரர் சூளாமணி தான் கண்டாய்
காண்டற்(கு) அரிய கடவுள் கண்டாய்
கருவார்க்(கு) ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதம் எல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே.

## திருவாசகம் – மாணிக்கவாசகர்

கடையவனேனைக் கருணையினால்
கலந்(து) ஆண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோச மங்கைக்(கு) அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா – புருடோத்தமநம்பி

தில்லை அம்பலத்(து) எங்கள் தேவ தேவைத்
தேறிய அந்தணர் சிந்தை செய்யும்
எல்லை அ(து) ஆகிய எழில்கொள் சோதி
என் உயிர் காவல் கொண்(டு) இருந்த எந்தாய்!
பல்லையார் பசுந்தலையோ(டு) இடறிப்
பாதமென் மலர் அடி நோவ நீ போய்
அல்லினில் அருநடம் ஆடில் எங்கள்
ஆருயிர் காவல் இங்(கு) அரிது தானே.

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணி உடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசை அனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் - 8

## தேவாரம் - சுந்தரர்

அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்(கு) உன்தன் வண்மை கண்டடியேன்
எந்தை நீ எனை நமன்தமர் நலியில்
இவன் மற்றென் அடியான் என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.

## திருவாசகம் - மாணிக்கவாசகர்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே!
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்(து) அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்(று) அருள் புரியாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா – கருவூர்த்தேவர்

உலகெலாம் தொழ வந்தெழு கதிர்ப் பரிதி
ஒன்று நூறாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திரு உடம்(பு) அச்சோ!
அங்ஙனே அழகிதோ அரணம்
பல குலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலை குலாம் பதணத்(து) இஞ்சி சூழ் தஞ்சை
இராசராசேச்சரத்(து) இவர்க்கே

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீர்
அடியார் அடிநாய் செப்புரை
அந்தம் இல் ஆனந்தச் சேந்தன்
எனைப் புகுந்(து) ஆண்டு கொண்ட ஆருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

சொல்லுவ(து) அறியேன் வாழி, தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லை வந்தருளி என்னை வழித் தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லை அம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி! போற்றி!

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் – 9

## தேவாரம் – சுந்தரர்

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர் சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே

## திருவாசகம் – மாணிக்கவாசகர்

அமையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
மொய்ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னை சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளவதில்லையே

## திருவிசைப்பா – திருமாளிகைத்தேவர்

கோலமே! மேலை வானவர் கோவே!
குணம் குறி இறந்த(து) ஓர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள்
கால காலா! காம நாசா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமே அமுதுண்(டு) அம்பலம் செம்பொன்
கோயில் கொண்டு ஆட வல்லானே!
ஞாலமே! தமியேன் நற் தவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமோ நணுகே!

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்கும் திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாய் குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்கமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி! போற்றி!

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள் – 10

## தேவாரம் – சுந்தரர்

காரூர் கண்டத்(து) எண்தோள் முக்கண் கலைகள் பல ஆகி
ஆரூர்த் திருமூலட்டானத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகம் கொண்டீர் வாழ்ந்து போதீரே

## திருவாசகம் – மாணிக்கவாசகர்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவதினியே.

## திருவிசைப்பா – திருமாளிகைத்தேவர்

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா(து)
அயன் திருமாலொடு மயங்கி
முறை முறை முறையிட்(டு) ஓர் வரியாயை
மூர்க்கனேன் மொழிந்த புன்மொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையில் பொறுக்கும் அம்பலத்துள்
நிறைதரு கருணா நிலையமே! உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே

## திருப்பல்லாண்டு – சேந்தனார்

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்(கு) அவ் அண்டத்தொடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம் – சேக்கிழார்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

நன்றி – அருட்கலசம்

"உலகத்தை படைக்காத உன் மடியில் மறைந்துள்ள
பணத்தையும் உலகத்தை படைத்தவனுக்கு நீ
உண்டியலில் போடும் பணத்தையும் ஒப்பிட்டுப்பார்
நீ கடவுளை சில்லறையாக மதிப்பதை உணர்வாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவிடமிருந்து

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்(து) அடி போற்றுகின்றேனே

ஆனை முகனே! அரனார் திருமகனே!
கானமதம் பாயும் ஒரு கையோனே! - ஞானம் உற
வித்தைகற்கும் பிள்ளைகட்கு விக்கினங்கள் வாராமல்
நித்தம் நித்தம் நீ துணையாய் நில்

தாயினும் நல்ல தலைவரன்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந் தாரே

அரியானை அந்தணர் நம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்

திகழ் ஒளியைத் தேவர்கள் தம் கோனை மற்றைக்
கரியானை நான் முகனைக் கனலைக் காற்றைக்
கனை கடலைக் குல வரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரா னைப்
பேசாதா நாள் எல்லாம் பிறவா நாளே

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப் பளிங்கு போல் வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பாள் இங்கு வாரா (து) இடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சிடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!
மன்னே! மாமணியே மழபாடி உள் மாணிக்கமே!
அன்னே! உன்னை அல்லால் இனி ஆரை நினைக்கேனே

பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!
எத்தாள் மறவாதே நினைக்கின்றேன் மனத்(து) உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்
அத்தா! உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனளாமே

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவா
குருதியும் அகந்தையும கொண்டு தண்டமுள்
பரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்.

வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்து அரசரோ(டு) என்னை
சரியாசனம் வைத்ததாய்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்றே
குன்(று) உருவ வேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா(து) உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிலாச்சோறு" தருணங்கள்

நாம் மழலைகளாகவும், குழந்தைகளாகவும் இருந்தபோது நமக்கு கிடைக்கப்பெற்ற விடயங்களில் ஒன்று "நிலாச்சோறு". சில கட்டுக் கதைகள்..., சில பொய்கள்...., சில விளையாட்டு கற்பனைகள் அதனுடன் நூறுசதவீத அன்பு எனும் வரையறைகளுக்கு உட்பட்ட பெறுமதிகளைத்தான் நாம் நிலாச்சோறாக சிறுவயதில் கண்டு இருக்கிறோம்.

எம்மை அறியாத அந்த நிமிடங்களில்தான் ஆரோக்கியமும், அன்பும் எம்மை அழகாக ஆட்கொள்ள ஆரம்பித்திருந்தன. இருந்தும் நாம் அறிந்துகொள்ளும் பக்குவத்தன்மையினை எய்தபின் பல அறியாமையின் ஸ்பரிசங்களை நாம் அறிந்தே தொலைத்து விட்டுருக்கிறோம். அப்படியே தொலைத்துவிட்ட 'நிலாச்சோறு' தருணங்களைப் போலவே மிக அருகில் இருந்தும் நாம் தொலைத்துவிட்ட ஒரு உறவுதான் எமது "அப்பம்மா".

வரலாறு படைத்தவர்களும், சாதித்தவர்களும் மட்டுமே அனைவராலும் நினைவு கூறப்படுவார்கள் என்பது நிஜமில்லை. ஒரு சாதாரண பாமரனாக இருந்தாலும் அவர் "அன்பாளர்" என்கின்ற ஒரு அடையாளம் போதும் மனித இதயங்களின் விசாக்களை (VISA) இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு. அப்பேர்ப்பட்ட மிகச் சாதாரண மனிதர்களுள் ஒருவர்தான் எமது அப்பமாவும். நாம் அறிந்த அவருடைய வாழ்நாள் பகுதிகளில் நாம் ரசித்தவைகளோ பல.

உதாரணமாக, எமது பெயர்களை விநோதமாக அவர் உச்சரிக்கும் விதம் (தர்ஷாந்தை "டச்சு" என்பதும், பிரசாந்தை "பிரசாந்தா" என்பதும்), உதடுகளைத் தாண்டி எட்டிப்பார்த்து நர்த்தனமாடும் அவரின் ஒற்றைப்பல், திருவிழாக்காலங்களில் திருமுறைகளை அவருக்கென்றே ஒரு தனித்த சுருதியுடன் பாடும் விதம், ஒரு விதமாக கூனி நடக்கும் அவரின் அன்னநடை என முற்றுப்புள்ளியிடாமலே அவரைப்பற்றி விமர்சித்து கொண்டு இருக்கலாம்.

ஏன் அவரிடம் ஆசீர்வாதம் பெற்று வருபவர்களுக்கு என்றே தனித்து ஒரு அடையாளம் இருக்கிறது. கிட்டத்தட்ட ஹிட்லரின் சுவாஸ்டிகாபோல (Swastika) நெற்றியில் வட்டமாய் திருநீறும், தலைமுடிமேல் திருநீற்றுநரையும், வாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீற்று சுவையும் இருப்பர்களைக் கண்டால் அடித்துச் சொல்லலாம், இன்னார் 'வள்ளிநாயகத்தை' சந்தித்துவிட்டு வருகிறார் என்று.

அதேபோல, கடவுள் மீது உள்ள அலாதி பிரியத்தாலோ என்னவோ அவர் தலையணைக்கடியில் எப்போதும் இறை துதிபாடும் திருமுறைகளும், புராணங்களும், வேத சாஸ்திரங்களும், கும்பாபிஷேக பிரசுரங்களும் அவருடன் சேர்ந்தே உறங்கிக் கொண்டிருக்கும்.

அவரின் பற்களின் வலுயின்மையால் காலை உணவாக பாணின் (Bread) நடுப்பகுதிகள் பரிமாறப்படுவது வழக்கம். தெரிந்தோ தெரியாமலோ அதன் கரைப் பகுதிகளை உண்ணும் பாக்கியம் பெற்றவர்கள் நாங்கள்.

அவரின் 31ம் நாள் நினைவுப் பூர்த்தியினை முன்னிட்டு சமர்ப்பிக்கப்படும் குடும்ப விவரண திரைப்படம் ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் (Family Documentary) இருந்த போதுதான் நாம் அறியா அவரின் பழைய புகைப்படங்களின் அறிமுகம் எமக்கு கிடைத்தன.

**"நம்மைக் கடந்துபோன தருணங்களை பிடித்து வைத்துக்கொள்ளும் வாய்ப்பு புகைப்படங்களுக்கு மட்டுமே உண்டு"** என அமெரிக்க சிறுகதை எழுத்தாளர் ஒருவர் கூறியது எவ்வளவு பெரிய உண்மை என்பது தற்சமயம் நினைவுக்கு வருகிறது. -புகைப்படங்கள் அசையாமல் ஆயிரம் கதை பேசும் வல்லமை கொண்டவை என்பதனை அப்பம்மாவின் புகைப்படங்கள் எமக்கு உறுதிப்படுத்தின.

வாழும்போது மதிக்கப்படாத மனிதர்கள் கூட சுவர்களில் புகைப்படங்களாக தொங்கும்போது மதிக்கப்படுவது விந்தையான உண்மையல்லவா?

அப்படிப்பட்ட அவருடைய புகைப்படங்களை விவரணப்படத்திற்காக இரை மீட்டிக் கொள்ளும்போதுதான் நெருடல் ஒன்று எமக்கு ஏற்பட்டது, அஃதாவது,

சிறுவயதில் நாமும், அவரும் இணைந்து எடுத்துக் கொண்ட எந்த ஒரு புகைப்படத்திலும் எம் கால்கள் தரைமீது படாமல் தனது இடுப்புகளுக்குள்ளும், கைகளுக்குள்ளும் அதிகமாக எமக்கு தஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்திருக்கிறார். ஒருவேளை இன்றும் அதே கம்பீரமும், வல்லமையும் அவருக்கு இருந்திருந்தால் இந்த பாக்கியம் தொடர்ந்திருக்குவோ என்னமோ.

இரண்டாம் உலக யுத்தத்தில் நாசிகளுடைய (Nazis) சித்ரவதை முகாம் அனுபவங்களை அடிப்படையாக கொண்டு எமில் விக்டர் பிராங்கிளால் எழுதப்பட்ட உலக பிரசித்தி பெற்ற புத்தகத்தில் (Man's Search for Meaninig) ஒரு மனிதன் 'வாழ்க்கையின் மகத்துவத்தை' மூன்று விடயங்களில் அறிந்து கொள்ளலாம் என முன்மொழிகிறார்.

1) **ஏதேனும் ஒன்றை அழகாக உருவாக்கும்போது**

2) **மனிதர்களை அன்பால் ஆட்கொள்ளும் போதும் மற்றும் விரும்பியதை அனுபவிக்கும் போதும்**

3) **தவிர்க்க முடியாத இறுக்கமான சூழ்நிலைகளில் நாம் எப்படி எம்மை முகாமைப்படுத்திக் கொள்கிறோம்** என்பதே அவை.

அறிந்தோ அறியாமலோ எமது அப்பம்மாவும் இந்த மூன்று விடயங்களையும் சுவைத்து இருக்கிறார் என்பதற்கு அடையாளங்களாய் பல சிரமங்களுக்கு மத்தியிலும் அவர் அழகாக செதுக்கிய ஒன்று தான் – **எமது அழகான கூட்டுக் குடும்பம்.**

இரண்டாவது, மனிதர்களை அன்பால் ஆட்கொண்டு இருக்கிறார் என்பதற்கு உதாரணம் – **அவர் இறந்த செய்தி கேட்டு வீடுதேடி வந்தவர்களின் அளவிலாத எண்ணிக்கை.**

மூன்று, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளை தாங்கி அவர் செய்த தியாகங்களின் சான்று - **அவர் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் இன்றுவாழும் சொகுசான சந்தோஷ வாழ்க்கை.**

எமில் விக்டர் பிராங்கிளின் கூறியது போல அப்படி ஒரு வாழ்வின் மகத்துவத்தை அறிந்து கொண்ட மனிதனை அவன் பிரியா விடையின்போது அறிந்து கொள்ளலாம் எனும் கூற்றுக் கூட எமது அப்பம்மாவிற்கு சாலப்பொருந்தும்.

இருந்தாலும் மரணம் மரணித்தவர்களைக் காட்டிலும் அவர்களின் அன்புக்குரியவர்களைத்தான் அதிகம் புரட்டிப் போட்டு விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் பொறுத்தமட்டில் இரண்டாம் உலக யுத்தத்தில் நாசிகளின் சித்திரவதை முகாமில் சிதையுண்டு மீண்டும் வாழ்வைப்பெற்றுக் கொண்ட யூத சிறார்களுக்கும் எமக்கும் பெரிய வேறுபாடு ஏதேனுமில்லை. ஏனெனில் நமக்காக தம் வாழ்வை அர்ப்பணித்தவர்களின் பெறுமதியை அறிந்துகொண்டவர்கள் அல்லவா நாம்.

பேரப்பிள்ளைகளின் சார்பில்
இராம. பிரசாந்

*****************

## இஸ்லாத்தில் உள்ள ஹதீஸில் முகமது நபிகள் ஞாபகம் கூறும் உண்மை இது

- ஒரு மனிதன் இறந்த பின்பும், அவன் செய்த நன்மைகள் அனைத்தும் முற்றும் பெறுகின்றன. இருந்தும் அவன் இறப்புக்கு பின்னும் அடையக் கூடிய நன்மைகள் மூன்று இருக்கின்றன.

1) எந்தவித பிரதிபலனையும் எதிர் பார்க்காமல் அடுத்தவர்களின் நலன் கருதி இவன் செய்த நன்மை கலந்த மற்றும் சேவைகள்.

2) அடுத்தவர்கள் நலன்பெறக்கூடிய வகையில் அவனால் கொடுக்கப்பட்ட அறிவு.

3) தன் மரணத்திற்குப் பின்பும் தனக்காக இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்கின்ற மற்றும் தன் தவறுகளுக்குத் தன்சார்பாக இறைவனிடத்தில் மன்னிப்பு கேட்கின்ற இவனுடைய பிள்ளைகள்.

இவை மூன்றுமே, ஒரு மனிதன் இறந்த பின்னும் அவன் கணக்கில் இறைவனிடத்தில் நன்மைகளாக வரவு வைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்க்கிறோம்

அருள் அமுதம் அமரர். திருமதி. வள்ளிநாயகம் இராஜரெட்ணம் அவர்கள் அமரர்களான இராசையா, சௌந்தரிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மகளாக 19-6-1923ம் ஆண்டு திருக்கோணமலையில் பிறந்தார். அதுமட்டுமன்றி திருக்கோணமலையில் பிறந்த அமரர். ஐயாத்துரை இராஜரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியாகவும், நல் தமிழ் சீராட்டியாகவும் திருக்கோணமலையில் மிகப் பெருமைக் குரியவராக வாழ்ந்து காட்டினார்.

**'சிறந்த வாழ்வுக்கு அணிகலன் அவரே'** என்பதை உறுதிப்படுத்தியவரும் அவரே. உண்மையைச் சொன்னால் 'வள்ளிநாயகம்' என்ற பெயர் திருக்கோணமலையில் அனைத்துப் பகுதிகளிலும் (கிராமங்கள் உட்பட) அன்புக்கும், பாசத்திற்கும் மறுபெயர் ஆகத் திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது. 'தான்மட்டும் வாழ வேண்டும்' என்ற சுயநல நோக்கம் இல்லாமல் அனைவரும் சீராக வாழ வேண்டும் என்று நினைக்கும் பெருமாட்டிகளில் இவரும் ஒருவர்.

ஏழ்மையின் பெருமைகளையும், வறுமையின் பெறுமதிகளையும் வாழ்வின் ஆரம்ப காலங்களில் அனுபவமாக கொண்டு இருந்தபடியால் தன்னை நாடிவரும் அனைவரினதும் நலங்கள் மீதும் அதிக அக்கறை கொண்டவர்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" எனும் அப்பர் வாக்குக்கிணங்க சரியைத் தொண்டுகள் மீதும், சைவ ஆலயங்கள் மீதும் அளவிலாக் காதல் கொண்டவர்.

உதாரணமாக;

சமாது தங்கவிநாயகர் ஆலயம்

திருக்கோணேஸ்வரம்

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

கிருஷ்ணன் கோவில்

மாரியம்மன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசுவாமி கோவில்

முத்துக்குமாரசுவாமி கோவில்

சிவன் கோவில்

சனிஸ்வரர் கோவில்

சல்லி அம்பாள் ஆலயம்

பாலம் போட்டாறு பத்தினி அம்பாள் ஆலயம்

என அனைத்து அலயங்களிலும் அவர் செய்த அன்னதானங்களும் மற்றும் ஆலய திருப்பணிகளும் இதற்குச் சான்று.

அதுமட்டுமின்றி வில்லூன்றி கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா வினை முன்னிட்டு தாகசாந்தி (தண்ணீர் பந்தல்) சேவையை கடந்த 40 வருடங்களாக முன்னின்று செய்தவரும் இவரே.

அதே போன்று தமது தந்தை தாய் வழிநின்று தனது சகோதரி (பரமா)வுடன் இணைந்து வைர ஊற்றுப் பிள்ளையார் ஆலய வைகாசிப் பொங்கல் விழாவினை சுமார் 75 வருடங்களுக்கு மேலாக நடாத்திய பெருமைக்கும் உரியவர்.

இதை அனைத்தைக் காட்டிலும் எம்குடும்ப குலதெய்வம் தங்கவிநாயகர்(சுமாதுப்பிள்ளையார்) ஆலய வருடாந்த உற்சவங்களை தன் ஆயுள் முழுவதும் நடாத்தி வைத்த பெருமை இவர் ஒருவரையே சாரும்.

இவரது சேவைகள் ஒரு புறம் இருக்க எம் ஒன்றிணைந்த சகோதர உறவுகளுக்கு உறவுகளின் வலிமையையும், உறவுகள் ஒற்றுமையாக வாழ உறுதுணையாகவும் மற்றும் எங்கள் அன்பு வழிகாட்டியாகவும் வாழ்ந்த இப்பெருமாட்டி 13-02-2011ல் இவ் உலக வாழ்வை நீத்தார்.

89ம் அகவை நிறைவையொட்டிய நாட்களில் தனது ஆசைகள் அனைத்தையும் நிறைவுசெய்து இறுதி நாளில் எப்படி தனது உடலை அடக்கம் செய்யப்பட வேண்டும் என தனக்கென புதிய வழிவ்ய அமைத்து அதன்படி செய்யுமாறு தமது பிள்ளைகளுக்கு ஆணையிட்ட ஆளுமை மிகுந்த தாயும் இவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெண்மணியாக வாழ்ந்து இருந்தும் தனது இறுதிநாளில் சைவமுறைப்படி தகனம் செய்யப்படுவதை விரும்பாமல் தான் பிறந்து வளர்ந்த இத் திருமலை மண்ணுக்கே உரமாகிய விந்தையை என்னவென்று சொல்வது!

**இவ்வண்ணம் குடும்பத்தினர் சார்பில்**
**இ. சோமசுந்தரம் J.P**

குறிப்பு: இவ் ஆக்கம் 03-02-11 அன்று அதுவும் அவரின் மகளுடைய ஆண்டுத் திதியன்று எழுதக் கிடைத்தமை எனது பூர்வ ஜென்ம பலனாக இருக்கலாம்.

இ.சோமசுந்தரம் J.P

பேரன்புடையீர்!

இன்றைய பொழுதில் எம் அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையுடன் உலகின் அனைத்துப் பாகங்களிலும் மனித தவறுகளாலும், இயற்கையின் சீற்றங்களினாலும் உயிர்நீத்த அனைத்துச் சகோதர, சகோதரிகளின் ஆத்மசாந்திக்காக அந்த ஏதோ ஒன்றிடம் பிரார்த்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பிரிவு கண்டு கண்ணீர் சிந்திய

கண்களுக்கும்,

அவர் நினைவுகளை சுமந்து கொள்ளும்

அனைத்து இதயங்களுக்கும்

எம் இதயம் கனிந்த

நன்றிகள்

இன்னும் வாழ்கிறார்,

நம்பிக்கையுடன்

- நாங்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org